உ

ஸ்ரீராமஜெயம்

# சித்ர ராமாயண புத்தகம்

## பூஜையில் வைக்கத் தகுந்தது

இராமாயண படங்களும் கதாசுருக்கமும் அடங்கினது
ஸ்ரீராம கைங்கர்யத்துக்கென தயாரிக்கப்பட்டது.

Prepared and Published

BY

**V. VIJAYARAGHAVACHARI,**
(Retired Deputy Inspector of Schools,)
KUMBAKONAM

COPYRIGHT RESERVED WITH THE PUBLISHER.

**MARCH 1936**

[விலை ரூ. 1—8—0

# FOREWORD.

I feel it to be a privilege as well as a pleasure, an act of duty as well as an act of devotion, to write a foreword to this work, which aims at a pictorial representation of the immortal story of the "Ramayana". My noble and pious friend, Mr. V. Vijayaraghavachariar, has been serving God and Man in many ways in his own quiet unostentatious way. He is one of those God's good men "who do good by stealth and blush to find it fame". I am cast in an earthlier mould and am resolved that goodness of such a unique character should not only have scope for quiet work but should also have wide publicity as well. I am of opinion that anti-divine forces have had too much effectiveness in India, to day, because pious workers have shrunk from asserting themselves and from giving battle to the forces of selfishness and unrighteousness.

There is a well-known saying that he who opens a school closes a a prison. It is equally true that he, who writes a book presenting a pageant of the soul of the race, opens a school or rather many schools, and also closes many prisons. "Things seen are mightier than things heard" says the poet. The real justification for the temple **Utsavams** is that they present spiritual pageants in symbolic forms which attract the eye and instruct the mind and melt the heart. In the great, though now ruined, temples at Humpi—where even the air is as yet redolent of the glories of the Vijayanagar empire which is one of the proofs of the Hindu genious for political integration, I saw on the walls, the sculptured presentation of the story of the Ramayana. In the Sri Rama temple at Kumbakonam, I saw when I was young the mural paintings descriptive of the Ramayana story. I used to run away there often, and commune in spirit with the heroes of the past who lived in the spacious days of old. Even when I was a student in the local College, I felt the spell of the pictures. They seemed to becken me away from the petty futilities of our present life—cramming and wage earning and decay and death. They surrounded me with "an ampler ether and diviner air" and lowered me with "the depth and not the tumult of the soul."

There is a statement in the Ramayana that, when God came in a human form limiting himself out of compassion so as to draw to himself the dazzled eyes and melted hearts of men and women, the Veda, which like the Supreme was difficult of approach and comprehension, became easy and lovely in the form of the Ramayana. There is also a

prophecy that the Ramayana will endure as long as the hills shall endure and the streams shall flow. The statement and the prophecy are as true to-day, as they were when they were first made, and seem to be destined to be true for all time.

The drama aims at presenting a direct appeal to the eye, whereas a poet can appeal only to the ear. But the dramatist can succeed only in proportion to the response of the actors, who after all could hardly rise equal to his stature. The painter has no doubt the disadvantage that his creations are dumb but he can use his colours so as to create forms which are perfectly expressive of his ideas, whereas human actors could at best express the ideas only in an imperfect manner.

The total aim of all the endeavours of the poets and artists and sages and saints of India is to link the soul to God and enable us to win our birthright of bliss. Devotion is the secret of the transmutation by which work becomes worship, concentration becomes meditation, and knowledge becomes wisdom and ripens into realisation. This pictorial pageant is sure to enkindle devotion and deserves wide public appreciation and patronage.

KUMBAKONAM
13th Feb, '35

(Sd.) K. S. RAMASWAMY SASTRI.
Retired District Judge.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமஜயம்.

# முகவுரை.

மாதா ராமோ மத்பிதா ராமசந்திர:
ஸ்வாமீ ராமோ மத்ஸகா ராமசந்திர: ।
ஸர்வஸ்வம் மே ராமசந்த்ரோ தயாளு:
நாந்யம் தேவம் நைவ ஜாநே ந ஜாநே ॥

"ஓம் நமோ நாராயணாய ;" "ஓம் நம:சிவாய," என்ற திவ்ய மந்த்ரங்களில் ஜீவக்ஷரங்களாகிய "ரா" "ம" என்ற இரண்டு அக்ஷரங்களாலாகிய "ராம" என்ற இரண்டு எழுத்துக்களை, ஒரே தடவை உச்சரிப்பவனுக்கு, பகவானுடைய ஆயிரம் நாமம் சொல்லியதன் பலன் வரும்; நாடிய பொருள் கைகூடும் ; ஜன்மமும் மரணமும் இன்றித்திரும் ; நன்மை நல்கும் ; தீமை விலகும் ; ஸத் புத்ரனுண்டாகும் ; பெருந்தனம் கிடைக்கும் ; புண்யம் வரும் ; பாபம் போம் ; என்று பலவாறாக "ராம" நாம வைபவம் கூறுவார்கள்.

ராம சரிதத்தைப் படிப்பவர், கேட்பவர், நற்குண நற்சிலர்கள் ஆகிறார்கள். ஸ்ரீ ராமன் கல்யாண குணங்களையும் சித்திர ராமாயணப் படங்கள் காட்டும், நடை உடை, பாவனைகளையும், பாஷாக்ஞானம் இல்லாத புருஷர், ஸ்த்ரீ, பாலர்கள் சுலபமாய், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறியும்படி, சித்திரப் படங்கள் ரூபமாய், ஸ்ரீ ராம சரிதம் ஒருவாறு அமைக்கப் பட்டுளது. பித்ரு வாக்ய பரிபாலனமும், தாய், தந்தை, சகோதரர், பெரியோர் இவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியும், ஸ்த்ரீகள் புருஷனிடத்திலும், இதரர்களிடத்திலும் நடந்து கொள்ளவேண்டும் விதமும், நன்கு புலப்படும். உண்மை, பொறுமை, அன்பு, தயை, அனுதாபம், கீழ்ப்படிதல் என்கிற நற்குணம், நற்பழக்கம் முதலியவைகளைப் பாலர்களிடத்தில் இச்சித்திரப் படங்கள் அடங்கிய ராமசரிதம், உண்டு பண்ணி நிலைநிறுத்தக்கூடும் என்பது திண்ணம். இப்புத்தகம் சிறுவர், சிறுமிகள் கையில் என்றும் இருக்கவேண்டியது அவசியம்.

வெகு ஸமர்த்தரும், தெய்வபக்தியும் உடையவருமான, தஞ்சை சித்திரவேலைக்காரர் வீர ராகவலு இராஜா அவர்களால் காகிதப் பென்ஸிலால் வெளிக்கோட்டுருவம் (outline) மாதிரியாக எனக்குத் தரப்பட்டது.

பிறகு சென்னையில் சீர்திருத்தி சிறப்பித்து நல்ல இங்கியில் எழுதி போடோ படம் எடுத்து சித்திரப் படங்கள் அச்சிடப்பட்டன.

ஸ்ரீ ராமன், படங்கள் காட்டும் விஷய ஸாரத்தை அடியேனைக் கொண்டு எழுதி வைத்து, திவான் பஹதூர் V. K. ராமானுஜாசாரியரை கொண்டு பரிஷ்காரம் செய்து, அச்சிட்டிருக்கிறார். அது இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சித்திர ராமாயணம் புருஷர்களோ பெண்டுகளோ எல்லாரும், பூஜை செய்யத்தகுந்தது. சித்திர ராமாயண புத்தகத்தை வைத்துப் பூஜித்து இஷ்ட ப்ராப்தியையும், அரிஷ்ட நிவர்த்தி யையும் அடைலாம்.

இந்த சித்திர ராமாயணத்தில் பல பிழைகள் இருக்கலாம். ஸ்ரீ ராம சரிதத்தின் விசேஷ மகிமையை நினைத்து தோஷத்தை நீக்கி, குணத்தைக் கைக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்.

குறிப்பு :—இப்புத்தகம் விற்று முதலில் செலவுபோக, மிகுதித் தொகை பூராவும், ஸ்ரீ ராம கைங்கர்யத்துக்கே அர்ப்பணம் செய்யப்படும்

“ஸ்ரீ ராம ஸ்மரணமே நித்யாநந்தமே.”

ஷட்சக்ர (ஸீதா லக்ஷ்மண, பரத, சத்ருக்ன ஹனுமத்ஸமேத) ஸீதா ராமாய நம:

16-1-1936,
ஸ்ரீராம நிலயம்
57 பெரிய தெரு,
கும்பகோணம்

விஜய ராகவ தாஸன்.

N. B.—Copyright is reserved with the Author and Publisher.

# சித்ர ராமாயணம்

## பாலகாண்டம்

### படம் காட்டும் விஷய ஸாரம்

1. திருப்பாற் கடலில் ஆதிசேஷன் மேல் படுத்துக் கொண்டிருந்த நாராயணனிடம் ராவணன் செய்த ஹிம்ஸையைப் பொறுக்கமாட்டாமல், வருத்தப்பட்டுக்கொண்டிருந்த தேவர்கள் அவனிடம் முறையிட்டார்கள். அவன் தசரதனுக்குத் திருமகனாய் அவதாரம் செய்து, அவர்கள் காரியத்தை முடிப்பதாய்ச் சொன்னான். அவன் பக்கத்தில் ஸ்ரீதேவியும் பூதேவியும் உட்காந்திருந்தார்கள்.

2. நாரத மஹர்ஷி வால்மீகி ருஷியின் ஆச்ரமத்துக்கு வந்து உட்காந்திருக்கையில், “ இப்பொழுது இந்த உலகத்தில் எல்லா நற்குணங்களும் பொருந்தின எவனிருக்கிறான் ” என்று கைகூப்பிக்கொண்டு கேட்க, நாரதர் ராமனுடைய சரித்திரத்தை சுருக்கமாய் சொன்னார்.

3. வால்மீகி, தமஸா நதிக்கு ஸ்நானம் பண்ணப்போகையில், ஒரு வேடன் மரத்திலிருந்த இரண்டு கிரௌஞ்ச பக்ஷிகளில் ஆண் பக்ஷியைக் கொன்றதைப் பார்த்து, பெண் பக்ஷி கதறியதைக்கேட்டு வேடனை நிந்தித்தார். அப்பொழுது அவர் வாயிலிருந்து புறப்பட்ட ஒரு ச்லோகமானது ராமாயணக் கதையைச், சுருக்கமாகக் காட்டுவதாய் இருந்தது.

4. நான்முகபிர்ம்ஹா ஹம்ஸத்தின்பேரில் ஏறிக் கொண்டுவந்து, வால்மீகி சொன்ன ச்லோகம் தன்னால் வந்தது என்று சொல்லி, நாரதர் சொன்னபடி ராமாயணக் கதையை ச்லோக ரூபமாகச் செய்யும்படி அவருக்குக் கட்டளையிட்டான்.

5. தசரதன் தனக்குப்பிள்ளை இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், அச்வமேதம் என்ற யாகத்தைச் செய்ய வேணும் என்ற புத்தி அவனுக்கு உண்டாயிற்று. அதை வசிஷ்டர் ஒப்புக்கொண்டு, யாகத்தைச் செய்வித்தார். யாகம் நடந்த பிரகாரத்தை படம் காட்டுகிறது.

6. அங்கதேசத்தில் மழையில்லாமல் துர்பிக்ஷமாய் இருக்கையில், ருச்யச்ருங்கர் என்கிற ருஷியைஅழைத்து வர, தாஸிகள் ராஜாவினால்

அனுப்பப்பட்டார்கள். அவர்கள் பலவிதமாய் அவரை மயங்கும்படி செய்து, அவரை அழைத்து வந்தார்கள். உடனே மழை பெய்தது.

7. அந்த ராஜா தன் பெண்ணான சாந்தையை அந்த ருஷிக்கு கன்னிகாதானம் பண்ணினன். கல்யாணப் பந்தலேயும், விவாக பிரகாரத்தையும் படம் காட்டுகிறது.

8. ருச்யசிருங்கர் தசரதனைக்கொண்டு புத்திரகாம இஷ்டியைச் செய்வித்தார். அக்னி குண்டத்திலிருந்து ஒரு மஹா புருஷன் பாயஸத்தைக் கொண்டுவந்து தசரதனுக்குக் கொடுத்தான்.

9. பாயஸத்தைத் தசரதன் தன்னுடைய மூன்று மனைவிகளுக்கும் கொடுத்தான். கௌஸல்யைக்குப் பாதி, ஸுமித்திரைக்குக் கால்பங்கு, கைகேயிக்கு எட்டில் ஒருபங்கு. மீதி இருந்தது சுமித்திரைக்கே கொடுக்கப்பட்டது.

10. எல்லாரும் கர்ப்பம் தரித்தார்கள். வேலேக்காரிகள் அவர்களுக்கு உபசாரம் செய்தார்கள்.

11. மூன்று பேரும் ராமன் முதலான நான்கு குழந்தைகளைப்பெற்றார்கள்.

12. பிறந்த குழந்தைகளைத் தாயார்கள் மடியில் வைத்து பால் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கௌஸல்யை ராமனுக்கும், கைகேயி பரதனுக்கும், ஸுமித்திரை லக்ஷ்மணனுக்கும் சத்துருக்னனுக்கும்.

13. குழந்தைகளைத் தொட்டில்களில் படுக்கவைத்து, தாதிமார்கள் அவைகளை ஆட்டிக்கொண்டிருந்தார்கள்.

14. நாலு பிள்ளைகளும் வஸிஷ்டரிடம் புஸ்தகங்களைப் படித்துக் கொண்டிருந்தார்கள். புஸ்தகங்களைக்கொண்டு போன தூக்குகள் பக்கத்தில் தொங்கவிட்டு இருந்தன.

15. பிள்ளைகள் அஸ்திர வித்தையை அப்யாஸம் செய்து கொண்டிருந்தார்கள்.

16. யானை யேற்றம் குதிரை யேற்றம் இவைகளை அப்யாஸம் செய்து கொண்டிருந்தார்கள்.

17. விச்வாமித்திர மஹர்ஷி தன் யாகத்தை செய்விப்பதற்காக, ராமனை அழைத்துக்கொண்டு போக வந்தார். தசரதன் அவன் சிறு பிள்ளை

ாயிற்றே என்று மயங்கினான். வஸிஷ்டர் தைரியம் சொன்னதைக் கேட்டு, அவன் ராமனையும் லக்ஷ்மணனையும் ருஷியுடன் அனுப்பினான்.

18. அவர்களை விச்வாமித்திரர் அழைத்துக்கொண்டு, பக்கத்தில் இருப்பவைகளைக் காட்டிக் கொண்டு, முன்னால் போனார். பிள்ளைகள் அவர் பின்னால் போனார்கள்.

19. ஸரையூ நதிக்கரையில் ரிஷிகளின் ஆச்ரமத்தில் ராமனும் லக்ஷ்மணனும் தூங்கினார்கள். விடியற்காலத்தில் விச்வாமித்திரர் ராமன் அழகைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அவனைத் தட்டி எழுப்பினார்.

20. ராமனுக்கு விச்வாமித்திரர் சில அஸ்திரங்களைக் கொடுத்து, பசியையும் தாகத்தையும் போக்கக்கூடிய பலை, அதிபலை என்கிற இரண்டு மந்திரங்களை உபதேசித்தார். ராமன் லக்ஷ்மணன் அவைகளை பெற்றுக் கொண்டார்கள்.

21, 22. கங்கையைத் தாண்டின பிறகு, தாடகாவனத்துக்கு வந்து சேர்ந்தார்கள். தாடகையாலே ஜனங்களுக்கு வெகு ஹிம்ஸை உண்டாகிற தென்று அவளைக் கொல்லும்படி ரிஷி கட்டளையிட, ராமன் வில்லில் நாண் ஏற்றி சப்தம் பண்ண, தாடகை அதைப்பொறுக்காமல் எதிர்த்து வந்தாள். அவள் வருவதை விச்வாமித்திரர் அவனுக்குக் காட்டுகிறார், (21) அவளுடன் சண்டை நடந்தது. ராமன் ஒரே பாணத்தாலே அவளை அடித்துக்கொன்றான்.(22)

23. விச்வாமித்திரர் ஆச்ரமம்போய் யாகத்துக்காக தீக்ஷை செய்து கொண்டார். அதைக் கெடுக்கவந்த மாரீசன், ஸுபாகு என்ற ராக்ஷஸர்க ளில், ராமன் மாரீசனைப் பாணத்தாலே வெகு தூரம் கொண்டு போய் ஸமுத் திரத்தில் தள்ளினான். ஸுபாகுவைக் கொன்றான். இப்படி இடையூறைப் போக்கி யாகத்தை ராமன் முடித்து வைத்தான்.

24. விச்வாமித்ரருடன் ராமனும் லக்ஷ்மணனும் மிதிலைக்குப் புறப் பட்டு, அந்த ஊருக்குச் சமீபத்தில் இருந்த கௌதமர் ஆச்ரமத்துக்கு வந்தார்கள். ராமன் அவ்விடம் வந்ததும், கௌதமர் சாபத்தாலே கல்லா யிருந்த அகல்யை என்கிற அவர் பத்னி, தன்னுடைய முன் ரூபத்தை அடைந்து எழுந்திருந்தாள். கௌதமரும் வந்து அவளை அங்கீகரித்தார். ராமனுடைய திருவடி பட்டதும் அகல்யை எழுந்ததைப் படம் காட்டுகிறது.

25. மிதிலைக்குப் போய் அந்த நகரத்தின் ராஜா, ஜனகன் யாகம் செய்துகொண்டிருந்த யாக சாலைக்குச் சென்றார்கள். விச்வாமித்திரர்

தன்னுடன் கூடப்போன பிள்ளைகளை இன்னார் என்று அவர்களுடைட விருத்தாந்தத்தை ராஜாவுக்குச் சொன்னார்.

26, 27. விச்வாமித்திரர் ஜனகனிடமிருந்த ருத்திரனுடைய வில்லை ராமனுக்குக் காண்பிக்கும்படி சொல்ல, அதை எட்டு சக்கரமுள்ள ஒரு வண்டியில் வைத்து ஐயாயிரம் பேர்கள் இழுந்து வந்தார்கள். ராமன் வில்லை இடது கையால் பிடித்து தூக்கி நாண் ஏற்றினான். (26). வில் நடுவில் பெரிய சப்தத்துடன் முறிந்துவிழுந்தது. (27)

28, 29. ஜனகன் ஸந்தோஷப்பட்டு, தன் பெண் ஸீதையை ராமனுக்கு கன்னிகாதானம் பண்ணுவதாக தீர்மானம் செய்து, தசரதனை அழைத்துவர மந்திரிகளை அயோத்யைக்கு அனுப்பினான்—(28). தசரதனும் வசிஷ்டர் முதலானவர்களுடனும் கல்யாணத்துக்கு புறப்பட்டான். கல்யாண ஏற்பாடு 29ம் படத்தில் காட்டப் பட்டிருக்கிறது.

30. ரிஷிகள் மத்தியில் தசரதனும் ஜனகனும் உட்கார்ந்திருந்தார் கள். நிச்சயதாம்பூலம் நடந்தது.

31. விவாக காலத்தில் வஸிஷ்டர் பிராம்மணர்களுடன்கூட இருந்து விவாக ஹோமங்களையும் செய்தார்.

32 முதல் 35 முடிய. ஜனகன் ஸீதையை ராமனுக்கு கன்னிகா தானம் செய்தான். ராமன் அவளைப் பாணிக்ரஹணம் செய்தான். இதை 32ம் படமும், லக்ஷ்மணன் ஊர்மிளையை பாணிக்ரஹணம் பண்ணினதை 33ம் படமும், பரதன் மாண்டவியை பாணிக்ரகணம் பண்ணினதை 34ம் படமும், சத்துருக்னன் சுருத கீர்த்தியை பாணிக்ரஹணம் பண்ணினதை 35ப் படமும் காட்டுகின்றன.

36, 37. விவாகமான பிறகு பாட்டுக் கச்சேரியும், தாஸிகளின் நர்த் தனமும் நடந்தன.

38. ஜனகன் பெண்களைச் சீர்களுடன் அனுப்பினான். அவர்களுடன் தசரதன் அயோத்திக்குப் புறப்பட்டான்.

39. நடுவழியில் பரசுராமன் வந்து, "ருத்திரன் வில் பழுதானதினால் அதை முறித்தது பெரிதன்று, இது விஷ்ணுவின் தனுஸு, இதை நாண் ஏற்று, பிறகு என்னுடன் த்வந்த்வ யுத்தம் பண்ணு" என்று சொன்னான். ராமன் வில்லை வாங்கி நாண் ஏற்றி பரசுராமன் கர்வத்தைப் போக்கினான். அவனும் தசரதனும் மற்றவர்களும் அயோத்திக்கு போய்ச் சேர்ந்தார்கள்.

## அயோத்தியா காண்டம்

40. தசரதன் தனக்கு வயதான படியால் ராமனை யுவ ராஜாவாகப் பண்ணி, ராஜ்யத்தை அவனிடம் ஒப்புவிப்பதற்காக ஒரு ஸபையைக் கூட்டி, தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான். ஸபையோர்கள் அதை ஒப்புக் கொண்டு கொண்டாடினார்கள்.

41. பட்டாபிஷேகத்துக்கு வைத்த நாளுக்கு முந்தின ராத்திரியில், ராமன் ஸீதையுடன் உபவாஸத்துடன் விழித்துக் கொண்டிருக்கும்படி செய்ய, தசரதனால் வேண்டப்பட்டு, வஸிஷ்டர், அவனிடம் போய்பூர்வாங் கங்களைச் செய்வித்தார்.

42. மந்தரை என்கிற கைகேயியின் வேலைக்காரி அவள் மனதைக் கலக்கி, ராமனைப் பதினான்கு வருஷம் காட்டுக்கு போயிருக்கும்படியும், அவள் பிள்ளையான பரதனை யுவராஜாவாகப்பண்ணும்படியும், ராஜா செய்ய, யுக்தியை சொல்லிக்கொடுத்தாள்.

43. தசரதன் கைகேயிக்கு அவள் கேட்கும் வரன்களை, அவைகளை தெரிந்துகொள்ளாமல், கொடுப்பதாக ஒப்புக்கொண்ட படியாலும், ராமனைக் காட்டுக்கு அனுப்ப இஷ்டப்படாமையாலும், அவன் என்ன நல்ல வார்த்தை சொல்லியும், கைகேயி கேட்காமையாலும், மிகுந்த வருத்தத்தை அடைந்திருக்கையில், கைகேயி ராமனை வருவித்து, ராஜா அவனைக் காட்டுக்குப்போக கட்டளையிட்டதாகச் சொன்னாள்.

44. ராமன் தாயாரிடத்தில் காட்டுக்குபோக அனுமதிகேட்க, அவள் அதை ஒப்புக்கொள்ளாமல் தடுத்தாள். அவளுக்கும் அவளுக்கு உதவி யாகப்பேசின லக்ஷ்மணனுக்கும், ராமன் சமாதானம் சொன்னான். ஸுமி த்திரையும் அங்கே அப்பொழுது இருந்தாள்.

45. ராமன் ஸீதையை அயோத்தியில் இருக்கும்படி சொல்ல, அவள் கூடவே வருவேன் என்று பலவிதமாக நிர்ப்பந்தம் பண்ணினாள். ராமன் அவளையும், பிரார்த்தித்த லக்ஷ்மனனையும், கூட அழைத்துக்கொண்டுபோக ஸம்மதித்தான்.

46. ராமன் தன்னுடைய சொத்துக்களை பிராமணர்களுக்கும் பரி ஜனங்களுக்கும் கொடுத்தான்.

47. ஒரு பிராமணன் ஒரு கழியை வேகமாக எறிந்து அது போய் விழுந்த இடம்வரையில் எவ்வளவு பசுமாடுகள் நிற்குமோ, அவ்வளவு

பசுமாடுகளைக் கேட்டான். அவைகளை ராமன் கொடுக்க, பிராமணன் ஓட்டிக்கொண்டு போகிறான்.

48. கௌஸல்யையும் ஸுமித்திரையும் தசரதனிடம் வந்து துக்கத்துடனிருந்தார்கள்.

49. ராமனும் ஸீதையும் லக்ஷ்மணனும் தசரதனிடம் போனார்கள். ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் கைகேயி மரவுரிகளைக் கொடுத்தாள். ஸீதைக்கும் அதைக் கொடுக்கக் கைகேயியை வசிஷ்டர் நிந்தித்து, அதை திருப்பி வாங்கிக்கும்படி செய்தார்.

50. ராமன் காட்டுக்குப் புறப்பட்டுப் போகும்போது, நகரத்து ஜனங்கள் தங்கள் தங்கள் சொத்துக்களை எடுத்துக்கொண்டு அவனுடன் கூடப் போக யத்தனித்தார்கள்.

51. ராமனும் மற்ற இருவரும் தசரதனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, காட்டுக்குப் புறப்பட்டார்கள்.

52. கூடவந்த ஜனங்களை ராமன் திரும்பிப்போகச் சொல்லியும், அவர்கள் திரும்பிப்போகவில்லை. ராத்திரியில் அவர்கள் தூங்கும்போது, அவர்களை ஏமாற்றிவிட்டு, புறப்பட்டுப் போய்விட்டான்.

53. கங்கைக் கரைக்குப் போனபோது ரதத்திலிருந்து ராமன் முதலானவர்கள் இறங்கினார்கள். வேடராஜாவான குஹன் அவ்விடம் உபஹாரத்துடன் வந்து சேர்ந்தான்.

54. ராத்திரியில் லக்ஷ்மணன் பரப்பின இலைகளின் மேல் ராமனும் சீதையும் படுத்திருக்கையில், ஒரு பக்கத்தில் லக்ஷ்மணனும், மற்றொரு பக்கத்தில் குஹனும், நின்றுகொண்டு அவர்களைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

55. குஹன் கொண்டு வந்த ஓடத்தில் ஏறிக்கொண்டு, ராமன் கங்கையைத் தாண்டி அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தான்.

56. ராமன் பரத்துவாஜர் என்னும் ரிஷியின் ஆச்ரமத்துக்குப்போய், அவரை நமஸ்காரம் செய்து, அவர் செய்த ஆதித்தியத்தைப் பெற்றுக்கொண்டான். ரிஷி அவனை சித்ர கூடத்தில் வசிக்கும்படி சொன்னார்.

57. பரத்துவாஜர் சொன்னபடி ராமன் சித்ர கூடத்துக்குப்போய், அவ்விடத்தில் லக்ஷ்மணன் கட்டின பர்ணசாலைக்குள் சீதையுடன் பிரவேசித்தான்.

58, 59. திரும்பி வந்த சுமந்த்ரனாலே ராமன் சித்ர கூடம் போனதை அறிந்து, தசரதன் துக்கத்தினாலே மூர்ச்சையை அடைந்து, இறந்தான் (58). கௌஸல்யை சுமித்திரை முதலானவர்கள் பிரலாபித் தார்கள். (59).

60 அம்மான் வீட்டுக்குப் போயிருந்த பரதனை அழைத்து வர வசிஷ்டர் தூதர்களை அனுப்பினார்.

61. இறந்த தசரதனை எண்ணெய்க் கொப்பரையில் போட்டு, பரதன் வருகிறவரையில், அதை ரக்ஷித்து வந்தார்கள்.

62. பரதன் தம்பியுடனும், பாட்டனாருடனும் ஸபையில் இருக்கை யில், தூதர்கள் வசிஷ்டர் கொடுத்த பத்திரிகையை கொடுத்தார்கள்.

63. உடனே பரதன் சத்ருக்னனுடன் ரதத்தில் ஏறி அயோத் திக்குப் புறப்பட்டான்.

64. இருவரும் நகரத்துக்கு வந்து, கைகேயியிடம் போய், ராஜாவைப் பற்றியும் ராமனைப் பற்றியும் விசாரித்து, நடந்தவைகளை அறிந்தார்கள்.

65. உடனே மிகுந்த வருத்தத்துடன் கௌஸலையிடம் பரதன் போய், தன் தாயார் செய்த குற்றத்தில் தனக்கு சம்பந்தமில்லையென்று அவ ளுக்கு நம்பிக்கை உண்டாக்கினான்.

66. தசரதனை பல்லக்கில் ஏற்றிக் கொண்டு போய் அவனுக்கு பரதன் ஸம்ஸ்காரம் பண்ணினான்.

67, 68. சத்ருக்னன் மந்தரை செய்த அபராதத்தை அறிந்து, அவளை அடிக்க தரையில் இழுத்துக்கொண்டு போக, பரதன் அதைத் தடுத்தான்.

69, 70. ராமனைத் திருப்பி அழைத்து வர பரதன் சேனையுடன் சித்ர கூடத்துக்குப் புறப்பட்டான்.

71. பரதன் கங்கைக் கரைக்கு வந்தபோது, குகன் அவனிடம் வந்து, அவன் ராமனுக்கு அநுகூலமாய் இருப்பதை அறிந்து, அவனையும் சேனை யும் ஓடத்தில் ஏற்றி, அக்கரைக்குக் கொண்டுபோய் சேர்த்தான்.

72. பரதன் பரத்வாஜர் ஆச்ரமத்துக்குப்போய், அவருக்கு நமஸ் காரம் செய்து, ராமனை திருப்பி அழைத்து வர, தான் வந்ததை அவருக் குத் தெரிவித்தான்.

73. பரத்வாஜர் அவன் சேனைக்கு பெரிய விருந்தைச் செய்தார். எல்லாரும் திருப்தியாய் சாப்பிட்டார்கள்.

74. பரதன் சித்ரகூடத்துக்குப்போய் ராமனுக்கு நமஸ்காரம் செய்து, தசரதன் இறந்ததைத் தெரிவித்து, அயோத்யைக்கு திரும்பி வரும்படி பிரார்த்தித்தான்.

75. ராமன் தசரதனுக்குப் பிண்டதானம் செய்து, தர்ப்பணம் செய்தான். வசிஷ்டர் புரோகிதராய் இருந்தார்.

76. ராமன் பிதாவின் வாக்யத்தை நிறைவேற்றாமல் திரும்பி வர முடியாதென்று சொல்லி, தன்னுடைய பாதுகைகளைப் பரதனுக்குக் கொடுக்க, அவன் அவைகளை எடுத்துக்கொண்டான்.

77. பரதன் பாதுகைகளுடன் திரும்பி வந்து நந்திக்ராமத்தில் அவைகளுக்கு பட்டாபிஷேகம் செய்தான்.

---

## ஆரண்ய காண்டம்.

78. சித்திரகூட ஆச்ரமத்தில் சீதையின் மடியில் ராமன் படுத்திருக்கையில், காகாஸுரன் வந்து சீதையின் ஸ்தனத்தைக் கொத்த, ராமன் விழித்துக்கொண்டு, ஒரு தர்பத்தை அதன் மேல் பிரம்மாஸ்திரமாக விட்டான். காகாஸுரன் எங்கும் சுற்றி, ரக்ஷிப்பவனை அடையாமல், ராமன் திருவடிகளில் வந்து விழுந்தான்.

79. ராமன் சித்ரகூடத்தைவிட்டு தண்டகாரண்யத்துக்குள் பிரவேசித்து, அத்திரி ரிஷியின் ஆச்ரமத்துக்குப்போய் அவருக்கு நமஸ்காரம் பண்ணினான். அவர் பத்னி அனஸூயை சீதைக்கு உயர்ந்த சந்தனத்தைக் கொடுத்து அலங்காரம் செய்தாள்.

80. அந்த ஆச்ரமத்தை விட்டு, காட்டில் போகும்போது, விராதன் என்னும் ராக்ஷஸன் வந்து, ராமனையும் லக்ஷ்மணனையும் தோள்களில் தூக்கிக்கொண்டுபோக, அவர்கள் அவன் தோள்களை வெட்டி அவனைக் கொன்றார்கள்.

81. சரபங்கர் என்னும் ரிஷியின் ஆச்ரமத்துக்கு அவர்கள் போனார்கள்.

82. அவ்விடத்தில் ரிஷிகள் வந்து சரணாகதி பண்ணி, ராக்ஷஸர்களிடமிருந்து தங்களை ரக்ஷிக்கும்படி பிரார்த்தித்தார்கள். ராமன் அது தன்னுடைய வேலை என்றும் அதைச்செய்து உங்களை ரக்ஷிப்பேன் என்றும் சொல்லி அவர்களை ஸமாதனம் செய்தான்.

83. அகஸ்தியர் ஆச்ரமத்துக்குப் போய், அவர் கொடுத்த தனுஸையும் அவருடைய ஆசீர்வாதத்தையும் ராமன் பெற்றுக்கொண்டான்.

84. அகஸ்தியர் சொன்னபடி பஞ்சவடீக்குப் போகையில், அதன் ஸமீபத்தில் ஒரு மரத்தடியில் ஜடாயு என்னும் கழுகு இருந்ததைப் பார்த்து, அது தசரதனுக்குத்தோழன் என்று அறிந்து, அத்துடன் ராமன் பேசிக் கொண்டிருந்தான்.

85, 86. பஞ்சவடீயில் லக்ஷ்மணன் கட்டின பர்ணசாலையில் ராமனும் சீதையும் இருக்கையில், சூர்பணகை என்னும் ராக்ஷஸி வந்து, தன்னை விவாகம் பண்ணிக்கொள்ளும்படி ராமனை வேண்டினாள். தனக்கு ராமன் அதை ஒப்புக்கொள்ளாத போது, சூர்பணகை ஸீதையிருப்பதை இடையூறாக எண்ணி அவளை விழுங்க ஆரம்பிக்கையில், லக்ஷ்மணன் அவள் மூக்கையும் காதையும் அறுத்து விட்டான்.

87. சூர்பணகை ஜனஸ்தானத்திலிருந்த தன்னுடைய சகோதரனான கரனிடம் போய் லக்ஷ்மணன் செய்ததை காட்டி முறையிட்டாள்.

88. முதல் 93. கரன் தூஷணன் திரிசிரஸ் என்னும் ராக்ஷஸர்கள், பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடன் சண்டைக்கு வர, ராமன் சீதையைக் காத்துக்கொண்டிருக்கும்படி லக்ஷ்மணனுக்கு கட்டளையிட்டு (88), சண்டைக்கு ஸித்தமாய் நின்றான். முதலில் சேனையை நாசம் பண்ணி (89) (90), பிறகு, தூஷணனையும் (91), திரசிரஸையும் (92), கரனையும் (93) ஸம்ஹாரம் பண்ணினான்.

94. சண்டையிலிருந்து விஜய லக்ஷ்மீயுடன் திரும்பிவந்த ராமனை, சீதை சந்தோஷத்துடன் கட்டிக்கொண்டாள்.

95. சூர்பணகை ஸகோதரனான ராவணனிடம் போய், தனக்கு லக்ஷ்மணன் செய்ததையும், கரன் முதலானவர்கள் நாசம் அடைந்ததையும் சொல்லி, சீதையின் அழகை வர்ணித்து, அவளை அவனுக்காகத் தான் எடுத்து வரப்போனதாயும், தனக்கு அந்த கஷ்டம் வந்ததாயும் தெரிவித்தாள்.

96. ராவணன் மாரீசன் ஆச்ரமத்துக்குப்போய், சீதையை தான் கொண்டு போவதற்காக மான்வேஷத்துடன் ராமன் ஆச்ரமத்துக்குப்போய், தந்திரத்தினாலே ராமனையும் லக்ஷ்மணனையும் அப்புறப்படுத்தும்படி வேண்டினான்.

97. மாரீசன் ராவணன் சொன்னபடி ஆச்ரமத்துக்கு முன்னாலே, மான் வேஷத்துடன் விளையாடிக் கொண்டிருந்தான். சீதை மானைக்காட்டி அதைப் பிடித்துக்கொடுக்கும்படி ராமனை வேண்டினாள்.

98. மாரீசன் ராமனை வெகுதூரம் இழுத்துக்கொண்டுபோக, ராமன் அவனை ஒரே பாணத்தால் அடித்துக்கொன்றான். அவன் ராமன் குரலை அநுசரித்து "ஹா ஸீதே! ஹா லக்ஷ்மணா! என்று கத்திக்கொண்டு இறந்தான்.

99. இறந்த மானுடன் ராமன் திரும்பி வருகையில், சீதையினால் அனுப்பப்பட்ட லக்ஷ்மணனைக் கண்டு, தனியாய் இருந்த சீதைக்கு என்ன கெடுதிவந்திருக்குமோ என்று ராமன் பயந்தான்.

100. இந்த சமயத்தில் ராவணன் சந்யாசி வேஷத்துடன் ஆச்ரமத்துக்கு வந்து, சீதை செய்த உபசாரத்தை பெற்றுக்கொண்டு, தன்னை இன்னான் என்று தெரிவித்து, தனக்கு மனைவியாய் இருக்கும்படி அவளை வேண்டினான். அவள் சம்மதிக்காமல் அவனை பலவிதமாய் நிந்திக்க, அவன் அவளை எடுத்து தன் ரதத்தில் வைத்துக்கொண்டு ஆகாச மார்க்கமாய் இலங்கைக்கு ப்புறப்பட்டான்.

101. அவனை ஜடாயு கண்டு, அவனுக்கு ஹிதத்தை சொல்லியும் அவன் கேட்காதபோது, அவன் ரதத்தை உடைத்து, ஸாரதியைக் கொன்று, அவன் வில் முதலானவைகளை நாசம் செய்து அவனுடன் சண்டை செய்தான்.

102. ராவணன் ஜடாயுவின் பக்ஷங்களை அறுத்து அவனைக் கீழே தள்ளிவிட்டு சீதையுடன் இலங்கைக்கு போய்ச்சேர்ந்தான்.

103. சீதை தன்னுடைய நகைகளை கழற்றி, ஒரு துண்டு வஸ்திரத்தில் கட்டி, சுக்ரீவனும் வானரங்களும் இருக்கும் இடத்தில் எறிந்துவிட்டுப் போனாள்.

104. ராவணன் சீதையை அசோகவனத்தில் ராக்ஷஸிகள் நடுவில் வைத்து, அவளை நயத்தாலும் பயத்தாலும் தன் வசமாகும்படிசெய்ய அவர்களுக்குக் கட்டளை யிட்டான்.

105. ராமனும் லக்ஷ்மணனும் திரும்பிவந்து ஆச்ரமத்தில் ஸீதையைக் காணமல்,அவளைத்தேடிக்கொண்டு போகையில்,குற்றுயிராய்ப் படுத்திருந்த ஜடாயுவைக் கண்டார்கள். அவன் ராவணன் ஸீதையைக் கொண்டுபோனதையும், சண்டையில் தான் ராவணனல் அடிபட்டதையும் சொல்லி, பிராணனைவிட்டான். ராமன் தகப்பனைப்போல் பாவித்து அவனுக்குத் தகனம் செய்தான்.

106. மறுபடியும் ஸீதையை தேடிக்கொண்டு போகையில், கபந்தன் என்னும் ராக்ஷஸனைக்கண்டு, அவனுடைய நீண்ட கைகளால் ராமனும் லக்ஷ்மணனும் பிடிக்கப்பட்டார்கள். அந்தக் கைகளை அவர்கள் துணிக்க, அவனுக்குத் திவ்ய ஞானம் வந்து, தன்னைத் தகனம் செய்துவிட்டு சுக்கிரீவனிடம் போகும்படி சொல்லி வழியையும் காட்டினன்.

107. அவர்கள் அந்த வழியாய்ப்போய், பம்பையின் மேல்கரையில் இருந்த சபரி என்பவள் ஆச்ரமத்துக்குப்போய்,அவள்செய்த உபசாரத்தை பெற்றுக்கொண்டார்கள்.

---

## கிஷ்கிந்தா காண்டம்

108. ராமனும் லக்ஷ்மணனும் பம்பை என்னும் ஓடைக்கு வந்து, அதன் அழகையும், புஷ்பித்த மரங்களின் அழகையும், மிருகங்களும் பக்ஷிகளும் விளையடும் அழகையும் பார்த்துக்கொண்டு, ரிஶ்யமூகம் என்னும் மலைக்கு வந்து ஒரு மரத்தினடியில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது அவர்கள் இன்னர் என்று விசாரிப்பதற்காக சுக்ரீவன் தன் மந்திரியாகிய அனுமானை அனுப்ப, அவனும் பிர்ஹ்மசாரி வேஷத்துடன் வந்து அவர்களைக்கண்டு கீழே விழுந்து நமஸ்காரம் செய்து, அவர்களை அறிந்து, தான் இன்னன் என்றும், சுக்கிரீவன் அவர்களுடைய உதவியைத் தேடுகிருன் என்றும் சொல்லி, தன்னுடைய நிஜரூபத்துடன் கைகூப்பிக்கொண்டு நின்றுன்.

109. அனுமான் ராமனையும் லக்ஷ்மணனையும் எடுத்துக்கொண்டு மலைக்கு மேலே போய், பயந்து ஓடிப்போயிருந்த சுக்ரீவனையும் அவ்விடம் கொண்டுவந்து, அவனுக்கும் ராமனுக்கும் ஸக்கியத்தைச் செய்தான். அனுமான் ஒரு அக்னியைமூட்ட, இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு அக்னியைப் பிரதக்ஷணம் செய்தார்கள். வாலியைக்கொன்று சுக்ரீவனுக்கு அவன் மனைவியையும் ராஜ்ஜியத்தையும் கொடுப்பதாய்

ராமன் பிரதிக்ஞை செய்தான். சுக்ரீவனும் வானரங்களை அனுப்பி சீதையைத் தேடும்படி செய்கிறேன் என்று பிரதிக்ஞை செய்தான்.

110. பலமுள்ள வாலியைக் கொல்லுவது ராமனால் முடியுமோ என்று சுக்ரீவன் சந்தேகப்பட அதைத் தீர்ப்பதற்காக, மலைபோல் குவிந்திருந்த துந்துபி என்பவனுடைய, எலும்பை, ராமன் தன்னுடைய கால்கட்டை விரலால் தூக்கி எறிந்தான்.

111. இதனால் சுக்ரீவனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அந்த எலும்பை வாலி முன்னால் தூக்கி எரியும்போது ரத்தமும் மாம்ஸமும் அத்துடன் சேர்ந்திருந்தன. இப்பொழுது அவைகள் இல்லாமல் எலும்பு உலர்ந்துபோய் இருந்தது. இதனாலே அதை சுலபமாய் தள்ளினதாலே ராமனுக்கு வாலியைக்காட்டிலும் அதிக பலம் இருப்பது எப்படி ஏற்படும் என்று அவன் எண்ணினான். அதற்காக தழைத்திருந்த ஏழு ஸால மரங்களை, ராமன் ஒரே பாணத்தாலே துளைத்தான். இதனாலே சுக்கிரீவனுக்கு முழு நம்பிக்கை உண்டாயிற்று.

112. ராமன் தான் பிரதிக்ஞை பண்ணினபடி, வாலியைக்கொல்லுவதற்கு, அவனைச் சண்டைக்கு கூப்பிடும்படி, சுக்ரீவனை அனுப்பினான். வாலியும் சுக்ரீவனும் சண்டைபோடும்போது, ராமன், ஒரு மரத்தின் பின்னாலே லக்ஷ்மணனுடன் மறைந்து இருந்துகொண்டு, சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

113. சுக்ரீவன் தோல்வியடைந்து, திரும்பி வந்து, ஏன் ராமன் ஒன்றும் செய்யாமல் இருந்தான் என்று கேழ்க்க, ராமன் "நீயும் வாலியும் ஒரே மாதிரி இருந்தபடியால் வாலி இன்னான் என்று அறிய முடியவில்லை; மறுபடியும் சண்டைக்குப் போ" என்று சொல்லி, புஷ்பங்கள் நிறைந்த ஒரு கொடியை சுக்ரீவன் கழுத்தில் கட்டும்படி, ராமன் லக்ஷ்மணனை ஏவினான். லக்ஷ்மணன் அதைச் சொன்னபடி செய்தான்.

114. மறுபடியும் வாலியும் சுக்ரீவனும் சண்டைபோட, மரத்தின் பின்னாலே மறைந்துகொண்டிருந்த ராமன், சுக்ரீவன் கொஞ்சம் சளைத்தபோது ஒரே பாணத்தாலே வாலியை மார்பில் அடித்துக் கீழே தள்ளினான். ராமன் அப்போது வெளியே வர, அவனைப் பார்த்து, வாலி "உனக்கு ஒரு விரோதமும் செய்யாத என்னை எதற்காக கொன்றாய்? அதையும் மறைந்திருந்து செய்தாய். உன்னை தார்மிஷ்டன் என்று எப்படி சொல்லலாம்" என்று நிந்தித்தான். ராமன் "உன் தம்பியின் மனைவி உனக்கு மாட்டுப் பெண் போல. அவளை நீ பரிக்ரஹித்தது பெரிய குற்றம். அதற்

காக ராஜாவாகிய நான் உன்னை தண்டிக்கவேண்டியது. மிருகங்களை மறைந்திருந்து கொன்றது குற்றமன்று" என்று பதில் சொன்னான். வாலி ராமன் சொன்னது சரியென்று ஒப்புக்கொண்டும், தன்னை மன்னிக்கும்படியும், தன் பிள்ளை அங்கதனை ரக்ஷிக்கும்படியும் பிரார்த்தித்தான்.

115. இறந்த வாலியை பல்லக்கில் எடுத்துக்கொண்டுபோய் மேல் நடக்கவேண்டியவைகள் செய்யப்பட்டன. அங்கதன் அக்னிப் பிரதானம் பண்ணினான்.

116. சுக்ரீவனுக்கு ராஜதர்மத்தை, ஜாம்பவான், அனுமான் முதலியவர்கள் முன்னிலையில், ராமன் உபதேசித்தான்.

117. ஜாம்பவான் அனுமான் முன்னிலையில், சுக்ரீவனுக்கு அபிஷேகம் செய்து ராஜாவாக அவன் தலையில் கிரீடத்தை லக்ஷ்மணன் வைத்தான்.

118. சுக்ரீவனை மழைகாலம் போனவுடன் சீதையைத் தேட ஏற்பாடு செய்யும்படி உத்தரவு பண்ணி, அவனை கிஷ்கிந்தைக்கு ராமன் அனுப்பி, ப்ரஸ்ரவண மலையில் மழைகாலத்தில் லக்ஷ்மணனுடன் இருந்தான். மழைகாலம் போனவுடன் சுக்ரீவன் வரவில்லை. ராமன் கோபித்துக்கொண்டு லக்ஷ்மணனை அவனிடம் அனுப்பினான்.

119. லக்ஷ்மணன் கோபத்துடன் கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்தான். அவன் வந்ததை அங்கதன் வழியாக, தாரை அறிந்து, வெளியே வந்து, லக்ஷ்மணனை சமாதானம் பண்ணி, அவனை சுக்ரீவனிடம் அழைத்துப் போனாள். சுக்ரீவன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். லக்ஷ்மணனும் தான் கடுமையாகப் பேசினதுக்கு சுக்ரீவனிடம் மன்னிப்புக் கேட்டான்.

120 சுக்ரீவன் ராமனிடம் வானரங்களுடன் வந்து, அவர்களை நாலுதிக்குகளிலும் சீதையைத் தேட அனுப்பினான். அவர்களில் தெற்குத் திக்கில் அனுப்பப் பட்டவர்கள் அனுமான், ஜாம்பவான், அங்கதன் முதலானவர்கள். சுக்ரீவன் அனுமானை ஸ்தோத்ரம் பண்ணினதைக்கண்டு, அவனால் கார்யம் முடியுமென்று எண்ணி, அவனிடம் ராமன் தன்னுடைய முத்திரை மோதிரத்தைக் கொடுத்து அனுப்பினான்.

## ஸுந்தர காண்டம்.

121. தெற்குத் திக்கில் போனவர்கள் ஜடாயுவின் தமயனான ஸம்பாதியால் சீதை லங்கையிலிருப்பதை அறிந்து சமுத்திரக் கரைக்குப் போனார்கள். ஜாம்பவனாலே உத்ஸாகப் படுத்தப்பட்டு அனுமான் சமுத்தி

ரத்தை ஒரே தாண்டலாய் தாண்டினான். அப்படித் தாண்டுகையில் சுரஸை என்னும் நாகமாதாவின் வாயில் நுழைந்து காது வழியாய் வெளிப்பட்டு, மறுபடி போகவிடாமல் தடை செய்த ராக்ஷஸியைக்கொன்றான். லங்கைக் குப் போய் அஸ்தமித்தவுடன் அதற்கு அபிமான தேவதையான ஒரு ஸ்திரீயை அடித்து கீழே தள்ளி, அவள் அனுமதியின் பேரில் அதற்குள் பிரவேசித்தான்.

122. அனுமான் சீதையை எங்கும் தேடுகையில் ராவணன் அந்தப் புரத்துக்குப் போய், அவனும் அவன் மனைவியான மந்தோதரியும் படுத்தி ருப்பதைப் பார்த்தான். ஒரு க்ஷணம் அவள் சீதையோ என்று பிரமித்து, பிறகு சில அடையாளங்களாலே அவள் சீதை அல்ல என்று தேறினான்.

123. அனுமான் கடைசியில் அசோகவனத்தில் ஒரு மரத்தடியில் சீதை இருந்ததையும், ராக்ஷஸிகள் அவள் பக்கத்தில் நின்கொண்டு அவளை அதட்டினதையும், த்ரிஜடை அவளை சமாதனம் செய்ததையும் பார்த்து, அந்த மரத்தின் மேல் ஏறி மறைந்திருந்து பார்த்துக்கொண் டிருந்தான். பின் ராத்திரியில் ராவணன் அவ்விடம் வந்து, ஸீதையை நல்ல வார்த்தை சொன்னதையும், அவள் கோபமாய் பதில் சொன்னதை யும், அனுமான் கேட்டுக் கொண்டிருந்தான்.

124. ராவணன். போன பிறகு, அனுமான் மரத்தின் மேலேயே இருந்துகொண்டு, ராமனுடைய கதையைச் சொல்லி, பிறகு கீழே இறங்கி, ஸீதைக்கு நமஸ்காரம் செய்து, "இவன் உண்மையில் ராமன் தூதனோ ? அல்லது ராவணனே இந்த ரூபத்துடன் வந்திருக்கிறானோ" என்று அவ ளுக்குண்டான ஸந்தேகத்தைப் போக்கி, ராமன் கொடுத்த கணையாழி மோதிரத்தை அவளிடம் கொடுத்தான். அவளும் ஸந்தோஷப்பட்டு, சூடாமணியை அவனிடம் கொடுத்து, ராமன் சீக்கிரம் வந்து தன்னை அழைத்துக்கொண்டு போகவேணும் என்று ஸமாசாரம் சொல்லி, அவ னுக்கு விடைகொடுத்தாள்.

125. அனுமான் ராவணன் பலத்தை அறிய வேண்டு மென்றும், அவனிடம் போவதற்கு எப்படி வழியேற்படு மென்றும் ஆலோசித்து அசோக வனத்தை பலவிதமாய் அழித்தான். அங்கிருந்த ராக்ஷஸிகள் அதை ராவணனிடம் தெரிவித்தார்கள்.

126. முதல் 131. வரையில். ராவணன் அனுமாரைக் கட்டிக்கொண்டு வர பலசேனைகளையும் பலபேர்களையும் அனுப்பினான். அவர்கள் எல்லாரை யும் அனுமான் நாசம் பண்ணிவிட்டான். அவர்களில் 126ல் ஜம்புமாலி யுடனும் அவன் சேனையுடனும் யுத்தம்.

127. அனுமான் கோபுரம் போன்ற ஒரு தோரணத்தின் மேல் ஏறி உட்காந்திருந்தது.

128ல் ஜம்புமாலியின் வதம், 129ல் மந்திரிகளுடைய ஏழு பிள்ளைகளின் வதம். 130ல் ஐந்து சேனாதிபதிகளின் வதம். 131ல் ராவணனுடைய பிள்ளையான அக்ஷன்வதம்.

132. அனுமானுக்கும் இந்திரஜித்துக்கும் சண்டை.

133. இந்திரஜித்து அனுமானை பிரும்மாஸ்திரத்தால் கட்டினான்.

134. அனுமானை இழுத்துக் கொண்டு ராவணனிடம் இந்திரஜித்து போனான். அவனை, ஏன் வனத்தை அழித்தாய், சேனைகளை ஏன் வதம் செய்தாய் என்று மந்திரி மூலமாய் ராவணன் கேட்க, அனுமான் தான் தூதன் என்றும், சீதையை ராமனிடம் சமர்ப்பிவிக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவனுக்கும் லங்கைக்கும் நாசம் ஏற்படுமென்றும், ஹிதத்தை உபதேசித்தான். இதைப் பொறுக்காமல் ராவணன் அவனைக் கொல்லும்படி கட்டளையிட, விபீஷணன் தூதனைக் கொல்லுவது தர்மம் அன்று என்று அதை விலக்கினான்.

135. அனுமானுடைய வாலில் கந்தையைச் சுற்றி, எண்ணெயில் தோய்த்து அதை கொளுத்திவிடும்படி ராவணன் உத்தரவு பண்ணினான். அவன் வேலைக்காரர்கள் அதை அப்படியே செய்து, அவனை தெருத்தெருவாய் இழுத்துக்கொண்டு போனார்கள். எல்லாரும் வேடிக்கை பார்க்க வந்தார்கள். அனுமான் இதைப் பொறுத்துக்கொண்டிருந்து, பிறகு வாலின் நெருப்பாலே, விபீஷணன் வீடு தவிர, ஊர் முழுவதையும் கொளுத்தினான். இதை அறிந்த சீதை, "அனுமானுக்கு குளிர்ந்திருக என்று அக்னியை பிரார்த்தித்தாள். நெருப்பு அனுமானக்கு சுடவில்லை. அனுமான் ஆச்சரியப்பட்டான்.

136. கடைசியில் அனுமான் வாலை சமுத்திரத்தில் தோய்த்து, நெருப்பை அணைத்துக்கொண்டான்.

137. அனுமான் நெருப்பினாலே சீதைக்கு ஏதாவது கெடுதி வந்ததோ என்று பயந்து வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், ஆகாசத்தில் போகிறவர்கள் "இதென்ன ஆச்சரியம், ஊர் முழுவதும் எரிகையில், சீதை இருந்த இடத்தை மாத்திரம் நெருப்பு தொடவில்லையே" என்று சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டு, பயம் தெளிந்து, அவளிடம்போய், நமஸ்காரம் செய்து, உத்தரவு பெற்றுக்கொண்டு, லங்கையைவிட்டுக் கிளப்பினான்".

138. அனுமான் சமுத்திரத்தை மறுபடியும் தாண்டி ஜாம்பவான் முதலானவர்களைக் கண்டு, நடந்தவைகளை அவர்களுக்குத் தெரிவித்தான்.

139. வானரங்கள் திரும்பி கிஷ்கிந்தைக்கு வருகையில் அதன் ஸமீபத்திலுள்ள சுக்ரீவனால் ரக்ஷிக்கப்பட்டு வந்த வனத்தில் மதுவைக் குடித்துக்கொண்டிருந்தன.

140. வனத்தைக் காத்துக்கொண்டிருந்த ததிமுகன், சுக்ரீவனிடம் முறையிட, அவனே அனுமான் போனகார்யத்தை முடித்துக்கொண்டு வந்திருக்கிறான் என்று அறிந்து, அவனை வருவிக்க, அவன் வந்து ராமனிடம் "கண்டேன் சீதையை" என்று சொல்லி, சூடாமணியைக் கொடுத்தான்.

## யுத்த காண்டம்.

141. உடனே ராமன் வானர சேனையுடன் சமுத்திரக்கரைக்கு போனான். அப்போது ராவணனால் அவமானப் படுத்தப்பட்ட விபீஷணன், நாலுமந்திரிகளுடன் அங்கேவந்து, ராமனிடம் சரணாகதி பண்ணினான்.

142. சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு உபாயத்தை ஆலோசிக்கையில், விபீஷணன், ஸமுத்திர ராஜன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு ராமன் தர்ப்பத்தில் படுத்துக்கொண்டிருக்கவேண்டு மென்று, சொன்னான். அதை ராமன் அப்படி செய்து மூன்று நாள்படுத்துக்கொண்டிருந்தான்.

143. சமுத்திர ராஜன் வரவில்லை. ராமன் "சமுத்திரத்தை வற்ற அடிக்கிறேன்" என்று கோபித்துக் கொண்டு வில்லில் நாண்ஏற்ற, சமுத்திர ராஜன் பயந்து வந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு, "நான் இடம் கொடுக்கிறேன், சமுத்திரத்தில் அணையைக்கட்டி, அதுவழியாய் லங்கைக்குப் போகலாம்" என்று சொன்னான். நளன் அணையைக் கட்டினான். ராமன் அனுமான் தோளிலும், லக்ஷ்மணன் அங்கதன் தோளிலும் ஏறிக் கொண்டு, அணைவழியாய் லங்கைக்குப்போய் சேர்ந்தார்கள்.

144. ராவணன் சுகன் சாரணன் என்பவர்களை வானர சேனையிடம் போய், அதன் இருப்பை அறிந்து வரும்படி உத்தரவு பண்ண, அவர்கள் குரங்கு ரூபத்துடன், அதனிடம்போய் பார்க்கையில், விபீஷணன் அவர்கள் ராக்ஷஸர்கள் என்று தெரிவிக்க, அவர்களை வானரங்கள் ஹிம்சை செய்தார்கள். ராமன் அவர்களை விட்டுவிடும்படி உத்தரவு பண்ணினான்.

145. தூதர்கள் வந்து வானரசேனையின் பலத்தைச் சொல்ல, ராவணன் மந்திரிகளுடனும் இந்திரஜித்துடனும் ஆலோசனை செய்தான்.

146. லங்கைக்கு போன ராத்திரியில் சந்திரோதயம் ஆனபொழுது, ஊரைப் பார்ப்பதற்காக, ராமன், லக்ஷ்மணனுடனும் சுக்ரீவனுடனும் அனுமானுடனும் சுவேலம் என்னும் மலையின்மேல் ஏறினான்.

147. வானர சேனையைப் பார்க்க வந்திருந்த ராவணனுடைய கிரீடங்களை, சுக்கிரீவன் கையாலே கீழேதள்ளினான். இருவருக்கும் த்வந்த்வ யுத்தம் நடந்தது. சுக்ரீவன் தப்பி ராமனிடம் திரும்பிவந்து சேர்ந்தான்.

148. சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, ராவணன் பொய்யாக ராமன் தலைபோலவும், அவன் வில்லைப்போலவும், செய்து கொண்டு சீதையிடம்போய் "ராமன் ராத்திரியில் கொல்லப்பட்டான். இது அவன் தலை. இது அவன் வில். இனிமேல் நீ என் வசமாகவேண்டும்" என்று சொன்னான். அப்பொழுது விபீஷணன் மனைவியான ஸரமை என்பவள் வந்து "இது பொய், பயப்படவேண்டாம்" என்று ஸீதையை தேற்றினாள்.

149. ராமன் அங்கதனை ராவணனிடம் தூதாக அனுப்பினான். அங்கதன் "சீதையை என்னிடம் கொடுக்கிறாயா ; அல்லது சண்டைக்கு வருகிறாயா" என்று ராமன் கேட்கச் சொன்னான் என்று சொன்னான்.

150. ராவணன் கோபித்துக்கொண்டு நாலு ராக்ஷஸர்களை,அங்கதனை பிடிக்கச் சொன்னான். அவர்களில் இரண்டு பேர்கள் அவனை ஒரு பக்கத்திலும், மற்ற இரண்டு பேர்கள் அவனை மற்றொரு பக்கத்திலும் பிடித்துக் கொண்டு தொங்கினார்கள். அங்கதன் அவர்களுடன் ஆகாசத்தில் கிளம்பி, அவர்களை உதறிவிட்டு, ஒரு கோபுரத்தின் சிகரத்தைத் தள்ளிவிட்டு, ராமனிடம் திரும்பிவந்துவிட்டான்.

151. ராமன் சேனையை வகுத்து, கிழக்கு, தெற்கு, மேற்கு, கோட்டை வாசல்களில் ஒவ்வொரு வகுப்பை நிறுத்தி, தானும் லக்ஷ்மணனும், சுக்ரீவனுடன் வடக்குக் கோட்டை வாசலில் இருந்தார்கள்; ராமனுக்கும் ராக்ஷதர்களுக்கும் சண்டை நடந்தது.

152. அங்கதனுக்கும் ராவணன் பிள்ளை இந்திரஜித்துக்கும், த்வந்த்வயுத்தம் நடந்தது. இந்திரஜித்தினுடைய ரதம் குதிரைகள், ஸாரதி ஆகிய இவர்களை அங்கதன் நாசம் செய்தான்.

153. அன்று ராத்திரியிலும் யுத்தம் நடந்தது. இந்திரஜித்து ராமனையும் லக்ஷ்மணனையும் நாகபாசத்தால் கட்ட, அவர்கள் மூர்ச்சையடைந்தார்கள். ராவணன், ஸீதையை விமானத்தில் ஏற்றிக்கொண்டு போய் ராமன் இருப்பை காட்டடும்படி, த்ரிஜடைக்கு சொன்னான். அவள் அப்படியே செய்ய, ஸீதை மிகுந்த துக்கத்தை அடைந்தாள். த்ரிஜடை "அவர்கள் நாகபாசத்தால் கட்டுப் பட்டிருக்கிறார்கள்; சீக்கிரம் அவர்களுக்கு பிரக்ஞை திரும்பிவரும்" என்று சொல்லி, அவளை தேற்றினாள்.

பிறகு கெருடன் அவ்விடம் வர, நாகபாசங்கள் போய், ராமனும் லக்ஷ்மணனும் முன் போல் எழுந்தார்கள்.

154 முதல் 161 முடிய :—ராக்ஷஸர்களுக்கும் வானரங்களுக்கும் சண்டைநடந்தது. அனுமான் தூம்ராக்ஷனை வதம் செய்ததை 155 லும்: அங்கதன் வஜ்ரதம்ஷ்ட்ரனைக் கொன்றதை 156 லும், அனுமான் நிகும்பனை கொன்றதை 157லும், நீலன் ராவணன் சேனாதிபதியான பிரகஸ்தனைக் கொன்றதை 158லும், சுக்ரீவன் ராவணனுடன் சண்டை போட்டு அவனை கலக்கினதை 159லும், அனுமான் ராவணனை முஷ்டியால் குத்தி மூர்ச்சையடைந்து கீழேவிழும்படி செய்ததை 160லும், நீலனுக்கும் ராவணனுக்கும் நடந்த சண்டையை 161லும், காட்டி இருக்கிறது.

162. ராவணனுக்கும் லக்ஷ்மணனுக்கும் சண்டை. சக்தியால் ராவணன் லக்ஷ்மணனை அடிக்க, லக்ஷ்மணன் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான்.

163. ராவணன் லக்ஷ்மணனை தூக்கிக் கொண்டு போகப் பார்த்தான். தூக்க முடியவில்லை.

164, 165. அனுமான் அவனை சிரமமில்லாமல் தூக்கிக்கொண்டு, ராமனிடம் கொண்டு போய்ச் சேர்த்தான்.

166. ராமனுக்கும் ராவணனுக்கும் சண்டை நடந்தது. ராவணன் ரதம் உடைபட்டு குதிரைகள் கொல்லப்பட்டு, அவன் அபஜயம் அடைந்தான். அப்பொழுது ராமன் "லங்கைக்குத் திரும்பிப்போய் வேறு ரதத்துடன் திரும்ப வா" என்று அவனை அனுப்பினான்.

167. தூங்கிக்கொண்டிருந்த கும்பகர்ணனை சண்டைக்கு அனுப்ப, ராவணன் அவனை யெழுப்பச் சொன்னான். அநேகம் பேர் அவன் மேலே ஏறி உலக்கைகளால் அடித்து, அவன் காதுகளில் ஜலத்தை குடம் குடமாய் விட்டு, யானையைக் கொண்டு மிதிக்கச் செய்து அவனை எழுப்பினார்கள்.

168. ராவணன் தன்னிடம் வந்த கும்பகர்ணனை வானரஸைன்யத்தை நாசம் செய்யச் சொல்ல, விபீஷணனால் முன்பு சொல்லப்பட்டதே நல்லது என்று அவனுக்கு ஹிதத்தைச் சொல்ல, அவன் கோபித்துக்கொண்டான். கும்பகர்ணன் அவனை ஸமாதானப்படுத்தி, சண்டைக்குக் கிளம்பினான்.

169, 170. கும்பகர்ணனுக்கும் சுக்ரீவனுக்கும் த்வந்த்வ யுத்தம் நடந்தது. கும்பகர்ணன் சுக்ரீவனை கட்டித் தூக்கிக்கொண்டு லங்கைக்குள்ளே போக, அவன் கும்பகர்ணனுடைய மூக்கையும் காதையும் அறுத்துவிட்டு, அவனிடமிருந்து கிளம்பி ராமனிடம் போய்ச்சேர்ந்தான்.

171. கும்பகர்ணனுடைய காதையும் மூக்கையும் கையில் வைத்துக் கொண்டு சுக்ரீவன் ராமன் முன்வந்து நின்றான். கும்பகர்ணன் திரும்பி வந்து வானரங்களை, ராமன் லக்ஷ்மணன் பார்த்துக் கொண்டிருக்கையில், வாயில் போட்டுவிழுங்கினான்.

172, 173, 174. கும்பகர்ணனுடன் யுத்தம் நடந்தது. முதலில் லக்ஷ்மணனும் பிறகு ராமனும் அவனுடன் சண்டை செய்தார்கள், ராமன் அவன் தலையை அறுத்துக் கீழே தள்ளினான்.

175. முதல் 179 முடிய. ராவணன் மூன்று பிள்ளைகளை சிலவீரர்களுடன் சண்டைக்கு அனுப்ப, அவர்களில் நராந்தகனை அங்கதனும். (175). தேவவாந்தகனை அனுமானும், (176), மகோதரனை நீலனும் (177), அனுமான் திருசிரஸையும் (178), சுக்ரீவன் மஹாபார்ச்வனையும் (179), கொன்றார்கள்.

180, 181. ராவணன் பிள்ளையான அதிகாயனுக்கும் லக்ஷ்மணனுக்கும் சண்டை நடந்தது. (180), அதிகாயன் கொல்லப்பட்டான் (181).

182. முதல் 184 முடிய: இந்திரஜித்து சண்டைக்கு வந்தான் (182), ராமனும் லக்ஷ்மணனும் அனுமானும் ஆலோசனை செய்தது (183), இந்திரஜித்து ராமனையும் லக்ஷ்மணனையும் பிரும்மாஸ்திரத்தால் கட்ட, அவர்கள் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து கிடந்தார்கள். ஜாம்பவனாலே ஏவப்பட்டு அனுமான் சஞ்சீவகரணீ என்கிற ஓஷதியுடன் ஒரு மலையை கொண்டு வந்தான் (184)

185. ராமனும் லக்ஷ்மணனும் மூர்ச்சை தெளிந்து எழுந்தார்கள்.

186. முதல் 190 முடிய. பல ராக்ஷஸர்கள் அடிபட்டு இறந்தார்கள்: அங்கதனால் துவிதனும் (186), அவனாலேயே பிரஹஸ்தனும்(187), சுக்ரீவனாலே, த்விவிதனும், துவிதாக்ஷனும் (188), சுக்ரீவனாலே, மைந்தனும் யூபாக்ஷனும் (189), அனுமானாலே நிகும்பனும் (190).

191. ஜனஸ்தானத்தில் அடிபட்டு இறந்த கரனுடைய பிள்ளையான மகராக்ஷன் ராமனால் கொல்லப்பட்டான்.

192. இந்திரஜித்துடன் சண்டை நடந்தது. அவன் மாயையால் மறைந்து பாணங்களை பிரயோகிக்க, ராமனும் லக்ஷ்மணனும் திகைத்து நின்றார்கள்.

193. இந்திரஜித்து, நிகும்பிலையில் ஒரு யாகம் செய்ய, சீதையைப் போல் ஒன்றைச்செய்து அனுமானுக்கு முன்னால் அதை வெட்டினான்.

194. அனுமான் மனம் கலங்கி, அதை ராமனிடம் தெரிவிக்க, ராமனும் லக்ஷ்மணனும் மூர்ச்சை யடைந்தார்கள். விபீஷணன் வந்து

இந்திரஜித்து வெட்டினது மாயா சீதை என்று உண்மையைத் தெரிவித்து அவர்களைத் தெளிவித்தான்.

195. அனுமான் ராக்ஷஸ சேனையை நாசம் செய்தான்.

196. இந்திரஜித்து, நிகும்பிலையில் யாகத்தைச் செய்து கொண்டிருந்தான்.

197. விபீஷணனுடன் லக்ஷ்மணன் நிகும்பிலைக்குப் போய் இந்திரஜித்து யாகம் செய்துகொண்டிருந்த அக்னிகுண்டத்தை அழித்தான்.

198. இந்திரஜித்து, வெளியே வந்து லக்ஷ்மணனுடனும், விபீஷணனுடனும் சண்டைக்கு வந்தான்.

இந்திரஜித்து மகாபலசாலி, வெகு சமர்த்தன்: ஜாக்கிரதையாக சண்டை போடு என்று ராமன் லக்ஷ்மணனுக்கு புத்தி சொல்லி, அவனுடன் சுக்ரீவனையும் அனுமானையும், ஜாம்பவானையும் அனுப்பினான். இந்திரஜித்து விபீஷணன் மேலே போட்ட சக்தியையும், தன் மேல் போட்ட அஸ்திரங்களையும், லக்ஷ்மணன் அறுத்துத் தள்ளி, ஒரு பாணத்தை மந்திரித்து அவன் மேலே போட்டு அவனைக் கொன்றான்.

199. இந்திரஜித்து இறந்ததைக் கேட்டு ராவணன் கோபித்துக் கொண்டு, ஸீதையை வெட்டப்போனான். அதை சுபார்ச்வன் என்னும் மந்திரி தகுந்த யுக்தியைச் சொல்லி விலக்கினான்.

200. ராவணன் மூல பலத்தைச் சண்டைக்குஅனுப்ப, அது வருவதை அங்கதனும், ஜாம்பவானும் ராமனுக்குக் காட்டினார்கள். அவனும் அதைப்பார்த்தான்.

201. ராமன் மூல பலத்தை மோஹனாஸ்திரத்தால் அடித்து நாசம் செய்தான். ராவணனுக்கு "இன்னும் புத்தி வரவில்லையே" என்று லங்கை முழுவதும் புலம்பிற்று.

202. 203, 204. வேறு மூன்று ராக்ஷஸ வீரர்களை ராவணன் அனுப்ப, அவர்களில் விருபாக்ஷனை சுக்ரீவனும் (202), மகாபார்ச்வனை அங்கதனும் (203), மகோதரனை சுக்ரீவனும் (204) கொன்றார்கள்.

205. கடைசியில் ராவணனே சண்டைக்கு வர, அவனுடன் லக்ஷ்மணன் சண்டை போட்டான். ராவணன் அவனைச் சக்தியால் அடித்து மூர்ச்சையடையும்படி செய்தான். அனுமான் ஔஷதிமலையை மறுபடியும் கொண்டு வந்து அவனைப் பிழைப்பு மூட்டினான்.

206. ராமன், விபீஷணனுடனும் லக்ஷ்மணனுடனும் நின்றுகொண்டு, ராவணனுடன் சண்டை போட்டான்.

207. இந்திரன் அனுப்பின ரதத்தில் ராமன் ஏறிக்கொண்டு ராவணனுடன் யுத்தம் செய்தான். ராவணனுக்கும் ராமனுக்கும் கொடுமையான சண்டை நடந்தது. ஒருவன் போட்டபாணத்தை மற்றொருவன் அறுத்துத் தள்ளினன். ஒருக்ஷணம் ராவணன் தளர்ச்சியடைய, அவன் ஸாரதி ரதத்தை போர்க்களத்திலிருந்து கொண்டுபோனன். ராவணன் பிரக்ஞை திரும்பிவந்து அவனைகோபித்துக்கொண்டு திரும்பிவந்தான். ராமன் அவன் பத்துத் தலைகளையும் அறுத்துத்தள்ள, அவைகள் மறுபடியும் முளைத்தன. இப்படிபலதடவைகள் செய்தும் ராவணன் கொல்லப்படவில்லை. கடைசியில் இந்திரன் ஸாரதி மாதலி சொன்னதைக்கேட்டு, ராமன் ராவணனை அடித்துக்கொன்முன்.

208. ராவணன் இறந்ததும் அவன் மனைவி மண்டோதரி வந்து அழுதாள். விபீஷணனும் தன் தமயனுக்கு இவ்விதமான கதி வந்ததைப்பற்றி துக்கப்பட்டுக்கொண்டிருந்து, பிரேதத்தை பல்லக்கில் வைத்துக்கொண்டுபோய் மேல்காரியங்களைச் செய்தான்.

209. விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் நடந்தது. லக்ஷ்மணன் கிரீடத்தை அவன் சிரஸில் வைத்தான்.

210. ராவணன் சண்டையில் கொல்லப்பட்டதையும், ராமனும் லக்ஷ்மணனும் சுக்ரீவனும் க்ஷேமமாய் இருப்பதையும், அனுமான் ஸீதையிடம்போய்ச் சொல்ல, அவளும் தன் பர்த்தாவைப் பார்க்கவேண்டும் என்னும் தன் இச்சையை ராமனிடம் தெரிவிக்க அனுமானிடம் சொன்னள்.

211. ராமன் உத்தரவுப்படி விபீஷணன் ஸீதைக்கு மங்கள ஸ்நானமும் அலங்காரமும் செய்வித்து, அவளை மூடுபல்லக்கில் ராமனிடம் அழைத்துக்கொண்டு போனன்.

212. ஸீதை ராமனுக்கு நமஸ்காரம்செய்து கை கூப்பிக்கொண்டு நின்முள். பரபுருஷன் வீட்டில் இருந்த அவளை அங்கீகரிக்கக்கூடாதென்றும், அவள் இஷ்டப்படி சுக்ரீவனிடமோ, விபீஷணனிடமோ இருக்கலாம் என்றும் ராமன் சொல்லக்கேட்டு, ஸீதை அக்னியை லக்ஷ்மணனைக் கொண்டு உண்டுபண்ணி, அக்னியை பிரதக்ஷணம் பண்ணி, அதில் பிரவேசிக்க, அக்னி அவளைக் கையால் ஏந்திக்கொண்டுவந்து, அவளிடம் தோஷமில்லை, அவளை அங்கீகரிக்கவேண்டும் என்று ராமனைப் பிரார்த்தித்தான்.

213. பிரும்மாவும் வந்து ஸீதையை அங்கீகரிக்கலாம் என்று சொல்ல, ராமன் அவளை அங்கீகரித்தான். தசரதனும் ஸ்வர்க்கத்திலிருந்து வந்து பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் செய்தான்.

214, ராவணனிடமிருந்த புஷ்பகவிமானத்தில் லக்ஷ்மணனும், ராமனும் ஸீதையும் ,ராக்ஷஸர்களுடன் விபீஷணனும், வானரர்களுடன் சுக்ரீவனும் ஏறிக்கொண்டார்கள்.

215. விமானத்தில் ஏறிக்கொண்டு அயோத்யைக்கு, போகப்புறப்பட்டு, நடுவழியில் பரத்வாஜர் ஆச்ரமத்துக்கு வந்து, ரிஷிக்கு ராமனும் ஸீதையும் லக்ஷ்மணனும் அநுமானும் நமஸ்காரம் செய்து, கை கூப்பிக் கொண்டு நின்றார்கள்.

216. நந்திக்ராமத்தில் இருந்த பரதனுக்கு, ராமன் திரும்பிவந்து பரத்வாஜர் ஆச்ரமத்தில் இருப்பதை, அநுமான் தெரிவித்தான்.

217. ராமன் நந்திக்கிராமத்துக்கு வந்தான். அவனும் ஸீதையும் கௌசல்யை முதலான தாய்மார்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள். ஸீதை அவர்களோடும், ராமன் பரதனோடும், லக்ஷ்மணன் சத்ருக்னனோடும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

218. புஷ்பக விமானத்தைக் குபேரனிடம் திருப்பி அனுப்பிவிட்டு, ராமன் ஸீதையுடன் ரதத்தில் ஏறிக்கொண்டு, அயோத்யைக்குப் புறப்பட்டான். பரதன் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு ரதத்தை நடத்தினான். லக்ஷ்மணனும் விபீஷணனும் சாமரம் வீசினார்கள். சத்ருக்னன் குடைபிடித்தான்.

219. ராமனுக்கும் ஸீதைக்கும் பட்டாபிஷேகம் நடந்தது. நாலுசமுத்திரங்களிலிருந்தும் தீர்த்தங்கள் தங்கக்குடங்களில் வானரர்கள் கொண்டுவந்தார்கள். ராமனையும் ஸீதையையும் ரத்னமயமான பீடத்தில் உட்கார வைத்து, வசிஷ்டர் பிராமணர்களுடன்கூட, அவர்களுக்கு அபிஷேகம் செய்து, ராமன் தலையில் கிரீடத்தைச் சூட்டினார். பரதன் ராமனுக்கு வெண்குடை பிடித்தான். லக்ஷ்மணனும், சத்ருக்னனும் வெண்சாமரம் வீசினார்கள். அநுமான் திருவடிவாரத்தில் உட்காந்திருந்தான். ராமன் தன்னுடன் கூடவந்த வானரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் அவர் அவர்களுக்கு தகுந்தபடி வெகுமானம் பண்ணினான்.

## எங்கும் ராமமயமாயிற்று.

220. ஸ்ரீ ராமன் தனக்குக் கொடுத்த ஸ்ரீரங்க விமானத்தை, விபீஷணன் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகும் அவஸரம்.

ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹநுமத்ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரம்மணே நம:

Kabeer Printing Works, Triplicane, Madras.


1. க்ஷீராப்தி
2. நாரதர் வாலமீகர்
3 கிரவுஞ்சபட்சி கள் வேடன் வால்மீகி சிஷ்யன்
4 பிர்ஹ்மா வால்மீகர்

5 தசரதர் அஸ்வமேதயாகம்.



6 கலைக்கோட்டுமஹாரிஷியைதாசிகள்அழைத்துவருவது.



7 கலைக்கோட்டு மஹாரிஷிக்கு கல்லியாணம்.



8. புத்திரகாமேஷ்டியாகம் கலைக்கோட்டுமஹாரிஷி அக்னிதேவதை பாயஸம் தசரதருக்குகையில்கொடுக்கிறது. (பாலகாண்டம்ஆரம்பம்.)



9. தசரதமஹாராஜா. பத்னி. கௌசலை. சுமித்திரை. கைகேயி.



10. கௌசலை. கைகேயி. சுமித்திரை.



11. கௌசலை. கைகேயி. சுமித்திரை, பிரசவங்கள்.



12. கௌசலைக்குராமர். கைகேசிக்கு பரதன். சுமித்திரை லக்ஷ்மணன் சத்துருக்குணன்.



13. குழந்தைகளை. தாதிகள் தொட்டிலில் ஆட்டுவது.



14. வஸிஷ்டரிடம், ராமர் லக்ஷ்மணன், பரதன், சத்துருக்குணன், வாசித்தல்



15. ராமர்வூ வில்வித்தை பழகுதல்.



16 ராமர்வூ யானையேற்றம் குதிரையேற்றம் பழகுதல்.



17 தசரதர் வசிஷ்டர், விஸ்வாமித்திரர், ராமர், லக்ஷ்மணர்.



18 லக்ஷ்மணர், ராமர், விஸ்வாமித்திரர்.



19 ஆற்றங்கரை. ராமர், லக்ஷ்மணர், விஸ்வாமித்திரர்.



20 விஸ்வாமித்திரர் ராமருக்கும் லக்ஷ்மணருக்கும் பாணங்கள்ஈதல்



21 விஸ்வாமித்திரர் லக்ஷ்மணர் ராமர் 22. தாடகை சம்ஹாரம்.



23. விஸ்வாமித்திரர் யாகம்   லக்ஷ்மணர்   ராமர்   மாரீசன் சுபாகு சம்ஹாரம்.



24. லக்ஷ்மணர். விஸ்வாமித்திரர். ராமர். அகல்யை. கௌதமர்.



25. ஜனகர். விஸ்வாமித்திரர்   சதானந்தர்   ராமர். லக்ஷ்மணர்.



26. வில் எடுக்கிறது ராமர் லக்ஷ்மணர்



27. தனுர்பங்கம்



28 தசரதர். ஜனகமந்திரிகல்லியாணம்சொல்லல்



29. தசரதர் வூட கல்லியாணத்திற்கு புறப்படுகல்.



30 நாரதர் ஜனகர் நிச்சய தாம்பூலம்



31 வசிஷ்டாதிகள் கல்யாண ஓமம்



32 ராமர் கல்லியாணம்



33 லட்சுமணர் கல்லியாணம்



34 பரதன் கல்லியாணம்



35 சத்துருக்கனன் கல்லியாணம்



36 தசரதரும் பத்தினிகளும்



37 சதுர் கச்சேரி



38 அயோத்திக்கு வருவது



39 ராமர் லட்சுமணர் லட்சுமணர் ராமர் வசிஷ்டர் தசரதர் பரசுராம கெர்வ பங்கம்



40 தசரதர் ராமருக்கு பட்டாபிஷேகம் செய்ய உத்தேசித்தல் 2 (அயோத்தியா காண்டம்) ஆரம்பம்



41 தசரதர் ராமர் வசிஷ்டர் ராமர் சீதை



42 கூனி கைகேசி கைகேசி தசரதர்



43 கைகேசி தசரதர் ராமரை காட்டுக்கு அனுப்புதல்
லட்சுமணரையும்



44 ராமர் லட்சுமணர் தாயார்களிடம் உத்திரவு கேட்குதல்



45 லட்சுமணர் ராமர் சீதை



46 சீதை ராமர் லட்சுமணர் யாத்திரா தானம்



47 பசுக்கள் தானம்



48 சுமித்திரை கௌசலை தசரதர்



49 கைகேயி மரையுரி கொடுத்தல் ராமர் சீதை லட்சுமணர்



50 அயோத்தியா வாசிகள்



51 தாதி, சுமித்திரை, கைகேசி, கௌசலை, தசரதர் ராமர் சீதை லட்சுமணர்



52 ராமர் சீதை லட்சுமணர் ஜனங்கள் கெங்காநதி



53 ராமர் லட்சுமணர் சீதை லட்மணன் சீதை ராமர் குகன் மந்திரி



54 லட்சுமணன் ராமர் சீதை குகன்



55 குகன் ஓடம் ஓட்டுதல்



56 லட்சுமணன் சீதை ஸ்ரீராமர் பாரத்துவாஜர்



57 சித்திரக்கூட பர்வதம் ராமர் சீதை லட்சுமணன்



58 மந்திரி தசரதர்



59 சுமித்திரை தசரதர் இறந்தார் கௌசலை கைகேசி



60 வசிஷ்டர் பரதனுக்கு கடிதம் அனுப்புகிறது



61 தசரதரை எண்ணெயில் இடுகிறது ௭



62 கேகேயராஜா சத்துருக்கருக்கும் பரதருக்கும் கடிதம் வருவது



63 சத்துருக்கனனும் பரதனும் புறப்படுதல்




64 கைகேயி
பரதன் சத்துருக்கனன்


65 சுமித்திரை கௌசலை
பரதன் சத்துருக்கன்


66 தசரதர் பரமபதம் சத்துருக்கனன் பரதர் வசிஷ்டர் தசரசர் தகனம் பரதன் சத்துருக்கன்

67 பரதன் சத்துருக்கனன் கூனி



68 கூனியை அடிக்கிறது.



69 பரத சத்துருக்கனுள் ராமனைக்காண காட்டுக்குப் போகுதல்



70 பரதன் சத்துருக்கனன் ராமரைக்காண காட்டுக்கு போகுதல்



71 சத்துருக்கனன் பரதன்



72. சத்துருக்கனன் பரதன் பரத்துவாஜர் வசிஷ்டர்



73 சத்துருக்கனன் பரதன் பரத்துவாஜர் செய்த விருந்து. யானைகளுக்கும் குதிரைகளுக்கும் பரிவாரங்களுக்கும்



74 பரதன் சத்துருக்கனன் நமஸ்காரம் சத்துருக்கனன் பரதன் ராமர் சிதை லட்சுமணன்



75 சத்துருக்கனன் பரதன் லட்சுமணன் ராமர் தசரதருக்கு பிண்டம் போடுதல்




76 லட்சுமணன் ராமர் பரதனுக்கு பாதுகை கொடுக்கிறது. கௌசலை சுபத்திரை கைகேசி சீதை



77 சத்துருக்கனன் பரதன் பாதுகா பட்டாபிஷேகம் 78 லட்சுமணன் சீதை ராமர் காக்கைக்கு சரம் ரய்தல்

2 அயோத்தியா காண்டம் சம்பூர்ணம்



3 ஆரண்ய காண்டம் ஆரம்பம்



79 அனுசூயை சீதைக்கு வஸ்திரம் புஷ்பம் கொடுத்தல்

அத்திரி ரிஷி ராமர் லட்சுமணன்



80 லட்சுமணன் சீதை ராமர் விருதன் வதம்



81 லட்சுமணன் சீதை ராமர் சரபங்க ரிஷி ஆச்ரமம்.



82 லட்சுமணன் சீதை ராமர் ரிஷி கூட்டங்கள்



83 லட்சுமணன் சீதை ராமர் அகஸ்தியர் ராமருக்கு தனுசு கொடுத்தல்



84 லட்சுமணன் சீதை ராமர் ஜடாயு



85 லட்சுமணன் சீதை ராமர்



86 சூர்பனகை லட்சுமணர் சூர்பனகை பங்கம்



87 சூர்பனகை கரனிடம் சொல்லுதல்



88 லட்சுமணன் சீதை



89 ராமர் கரன் வகைருக்களை வதம் செய்தல்



90 ராமர் கர தூஷணாதிகளுடன் யுத்தம்



91 ராமர் தூஷணன் வதம்.



92 ராமர் திருசிரசு சம்ஹாரம்.



93 ராமர் கரன் வதம் சூர்பனகை



94 ராமர் யுத்தம் செய்ததில் சீதை பார்த்து தழுவுதல்




95 சூர்பனகை ராவணனுக்கு தெரிவித்தல்



96 மாரீசனை ராவணன் வேண்டல்



97 லட்சுமணன் சீதை ராமர் மாயமான்



98 ராமர் மாரீச மானை பாணம் எய்தல்



99 லட்சுமணன் ராமர் மாயமானை கொண்டுவருதல்



100 சீதை ராவணன் ராவணன் சந்யாசி வேடம்



101 ராவணன் சீதையை கொண்டுபோகும்போது ஜடாயு யுத்தம்



102 ராவணன் ஜடாயு சிரகு அருத்தது



103 ராவணன் சீதையை எடுத்துக்கொண்டு போகும்போது சீதை நகைகளை எரிந்தது



ராவணன் அசோகவனத்தில் சீதை.



105. லட்சுமணன் ராமர் ஜடாயுவை காணுதல் ஜெடாயு




106 ராமர் கபந்தன் லட்சுமணன் கபந்தனுக்கு மோக்ஷம்.



107 லட்சுமணன் ராமர் சபரியை காணுதல். நதி




108 லட்சுமணன் ராமரை அனுமார் கண்டு விஸ்வரூபம் காட்டுதல்



109 லட்சுமணன் ராமர் அக்னி சுக்ரீவனுக்கு அபயம் கொடுத்தல். அனுமார்



110 சுக்ரீவன் சொல்லுதல். லட்சுமணன் ராமர் துந்துபி எலும்பை எயயுதல்



111 ராமர்ஸப்த மரு மரங்களையும் அம்பு எய்தல்



112 லட்சுமணன் ராமர் மரம் வாலி சுக்ரீவ யுத்தம்.



113 லட்சுமணன் ராமர். மாலை சுக்ரீவனுக்கு மாலை அடையாளம்



114 ராமர் மரத்தில் மறைந்திருந்து வாலியை வதம்செய்தல். தாரை. வாலி. ராமரோடு வாதம். ராமர். லட்சுமணன் சுக்ரீவன்,



115 நீலன் அனுமார் நளன் சுக்ரீவன் வாலியை ஸ்மசாணத்திற்கு கொண்டுபோகுதல். அங்கதன் வாலி தகனம் அங்கதன்



116 லட்சுமணன் ராமர் சுக்ரீவனுக்கு ராமர் ராஜதர்மம் உரைத்தல். ஜாம்பவான் அனுமார் நீலன் அங்கதன்.



117 நீலன் ஜாம்பவான் அனுமார் அங்கதன் சுக்ரீவன் பட்டாபிஷேகம் லட்சுமணன்



118 லட்சுமணன் ராமர் மதங்க ஆஸ்ரமம்



119 ருமை சுக்ரீவன் தாரை லட்சுமணன் சுக்ரீவனை அழைத்தல்



120 லட்சுமணன் ராமர் சுக்ரீவன் சைன்னியங்களை அனுப்ப யோசித்தல்



121 அனுமார் சமுத்திரத்தை தாண்டுதல் சுரசை மைநாக பர்வதம் அங்காரதாரைவதம் லங்கிணி வதம்

4. (கிஷ்கிந்தா காண்டம் சம்பூரணம்)



122 லங்கையில் அனுமார் சீதையை மறைந்திருந்து தேடுதல்

5. (சுந்தரகாண்டம் ஆரம்பம்)



123 ராவணன் ராக்ஷஸிகள் அசோகவனத்தில் சீதை அனுமார் திருச்சடை சமாதானம்



124 அநுமார் சீதைக்கு சூடாமணி கொடுத்தல், அசோகவனம்



125 ராட்சஷிகள் ராவணன் மந்திரி



126 அநுமார் ஜெம்புமாலி சேனையுடன் யுத்தம்



127 அநுமார் கோபுர யுத்தம்



128 அனுமார் ஜெம்புமாலி யுத்தம் வதம்



129 அனுமார் ஸப்த குமாரர்களை வதம் செய்தல்



130 அனுமார் பஞ்ச சேனாதிபதிகளை வதைத்தல்



131 அனுமார் அக்ஷய குமாரன் யுத்தம்



132 அனுமார் இந்திரஜித்து போட்ட பிரம்மாஸ்திரம்



133 இந்திரஜித்து அனுமாரை பிரம்மாஸ்திரத்தால் கட்டுப்படுத்தல்



134 அனுமாரை பிரம்மாஸ்திரத்தால் கட்டி ராவணனிடம் கொண்டுவருவது. விபீஷணன் அனுமார்.



135 அனுமாருடைய வாலில் பந்தம் கொளுத்தல் லங்காதகனம்



136 அனுமார் வாலை சமுத்திரத்தில் அணைப்பது.



137 சீதை அனுமாருக்கு போக விடைதருதல்



138 நீலன் அங்கதன் ஜாம்பவான் அனுமார் லங்கைக்குபோன சங்கதிகளை சொல்லுதல்



139 மதுவன மழித்தல்



140 ததிமுகன் சுக்ரீவன் லட்சுமணன் ராமர் அனுமார் ஜாம்பவான் அனுமார் சூடாமணி கொடுத்தல் 5.

(சுந்தரகாண்டம் சம்பூர்ணம்)



141 லட்சுமணன் ராமர் விபீஷணன் சரணாகதி 6. (யுத்தகாண்டம் ஆரம்பம்)



142 தர்ப்ப சயனம்



143ராமர் சமுத்திரராஜனை அழைத்தல். சமுத்திரம் அணை அங்கதன்மேல்லட்சுமணன் அனுமார்மேல்ராமர் நளன் வானர சயிந்நியம்



144 144 லட்சுமணன் ராமர் விபீஷணன் சுக சாரனை கொண்டு வருதல்



145 லங்கையில், மகோதரனைக்கொண்டு ராவணன் ஆலோசனை செய்தல்



146 லங்கையில ராமர்கூட வருதல் லட்சுமணன் ராமர் சுக்ரிவன்




147 சுக்ரீவன், ராவணனோடு கோபுரத்தில் மல்யுத்தம்



148 சீதை அசோகவனம் திருச்சடை ராவணன்



149 அங்கதன் தூது ராவ்ணன்



150 அங்கதனுக்கும், ராக்ஷஸர்களுக்கும், சண்டை



151 ராமருக்கும் ராக்ஷஸர்களுக்கும், சண்டை



152 அங்கதன் இந்திரஜித்துடன் சண்டை இந்திரஜித்து நாகபாசத்தால் கட்டுப்படுதல்,



153 சீதை திருச்சடை



154 லட்சுமணன் ராமர் ராக்ஷஸர்களுடன் சண்டை



155 அனுமார் தூம்ராக்ஷனுடன் யுத்தம், வதம்.



156 அங்கதன் வஜ்ரமுஷ்டன், வதம்



157 அனுமார் நிகும்பன் வதம்.



158. நீலன். பிரகஸ்தன் வதம்.



159. சுக்கிரீவனுக்கும், . ராவணனுக்கும் யுத்தம்.



160. அனுமாருக்கும் ராவணனுக்கும் கைகுத்து சண்டை



161. நீலனுக்கும் ராவணனுக்கும் யுத்தம்.



162 ராவணனுக்கும். லக்ஷ்மணனுக்கும் யுத்தம்.



163 லக்ஷ்மணனை ராவணன் தூக்கமுடியவில்லை



164. அனுமார், லக்ஷ்மணனை, தூக்குகிறது.



165. அனுமார், லக்ஷ்மணன். ராமர். லக்ஷ்மணன்.



166. ராமருக்கும், ராவணனுக்கும், முதல்நாள் சண்டையில், கிரீடமும், வாளும், இழந்து லங்கைக்கு திரும்புதல்.



167. கும்பகர்ணனை எழுப்புதல்.



168. கும்பகர்னன் ராவணன்



169. சுக்ரீவனுக்கும் கும்ப கர்னனுக்கும் யுத்தம்.



170. சுக்ரீவன் கும்பகர்ணனுடைய மூக்கும் காதும் அருத்துக்கொண்டு போகிறது.



171. சுக்ரீவன் லக்ஷ்மணன் ராமர் கும்பகர்ணன்.



172. லக்ஷ்மணன் ராமர் கும்பகர்ணன் யுத்தம்.



173. ராமர் கும்பகர்ணன்



174. ராமர் கும்பகர்ணன்வதம்.



175 அங்கதனுக்கும் நராந்தகனுக்கும் யுத்தம் வதம்



176 அனுமார் தேவாந்தகனை வதம் செய்தல்



177 நீலன் மைந்தனை வதம் செய்தல்



178 அனுமார் திரிசிரசை வதம் செய்தல்



179 சுக்ரீவன் மகாபார்சனை வதைத்தல்



180 லட்சுமணன் அதிகாயனை வதைத்தல்



181 அதிகாயன் வதம்



182 இந்திரஜித்து பிர்மாஸ்திரம் போட வருதல்



183 வானரங்கள் லட்சுமணன் ராமர் அநுமார்



184 சுக்ரீவன் அநுமார் சஞ்சீவி கொண்டுவருதல் ராம, லட்சுமனுள்
பிர்மாஸ்திரத்தால் கட்டுப்பட்டது.



185 ஜாம்பவான் நீலன் அங்கதன் லட்சுமணர் ராமர் சுக்கிரீவன்

பிரம்மாஸ்திரம் விடுபட்டது



186 அங்கதன் துவிதனை வதைத்தது



187 அங்கதன் பிரகஸ்தனை வதைத்தது



188 சுக்ரீவன் துவிதனையும், துவிதாஸ்சனையும் வதைத்தது



189 மயிந்தன், யூப்ராக்ஷசனை வதைத்தது.



190 அநுமார் கும்பனை வதைத்தது அநுமார் நிகும்பனை வதைத்தது.



191 ராமர் மகராக்ஷசன் வதம்



192 லட்சுமணன் ராமர் இந்திரஜித்து மேகத்தில் மறைந்திருந்து யுத்தம் செய்தது



193 அநுமார்முன் மாயா சீதையை இந்திரஜித்து வெட்டுதல்



194 லட்சுமணன் ராமர் விபீஷணன்



195 அநுமார் மூலபலங்களை அழித்து



196 இந்திரஜித்து நிகும்பலை யாகம்



197 லட்சுமணன் இந்திரஜித்துடன் யுத்தம்.



198 லட்சுமணன் விபீஷணன் இந்திரஜித்து வதம்



199 அசோகவனத்தில் சீதையை ராவணன் வெட்ட வருதல்



200 லட்சுமணன் ராமர் அங்கதன் ஜாம்பவான் ராவணனுடைய மூலபலங்கள் வருவதை அங்கதன் தெரிவித்தல்



20 ராமர் மூலபலங்களை மோகனாஸ்திரத்தால் வதைத்தல்



202 சுக்ரீவன் விதுபாட்சனை வதைத்தல்



203 அங்கதன் மகாபார்சனை வதைத்தல்



204. சுக்ரீவன் மகோதரனை வதைத்தல்



205 லட்சுமணருக்கு சக்தியில் மூர்ச்சையை எழுப்பியது

அனுமார் சஞ்சீவி மலையை கொண்டுவந்தது



206 ராமர் விபீஷணன் லட்சுமணன் ராவணன்



207 ராமர் பிரம்மாஸ்திரத்தால் பிரயோகித்து ராவணனை வதம் செய்தல்



208 ராவணனை பார்த்து மண்டோதரி விசனப்படுதல் விபீஷணன் ராவணன் இருத்ததை அக்னியில் இடுதல்




209 விபீஷணன் பட்டாபிஷேகம்




210 சீதைக்கு அனுமார் சேதி சொல்லுதல்



211 முடுபல்லக்கில் சீதையை ராமரிடம் அழைத்துக்கொண்டு போகுதல்




212 சுக்ரீவன் லட்சுமணன் ராமர் சீதை அக்னி பிரவேசம்



213 இந்திரன் பிரம்மா நாரதர் முதலான தேவர்களைக் காணுதல் நாரதர் ராமருக்கு பிரத்யக்ஷமாகி அவர்களை தேற்றி செல்லுதல்.



214 புஷ்பகத்திலிருந்து அயோத்திக்கு செல்லுதல்



215 அனுமார் லட்சுமணன் சீதை ராமர் பாரத்துவாஜ ரிஷி



216 சத்துருக்கனன் பரதன் அனுமார்



217 சுமித்திரை கைகேயி கௌசலை சீதை ராமர் பரதன் லட்சுமணன் சத்துருக்கனன்

(நந்திக்கிராமம்)



218 ராமர் சேனாதிபதிகளுடன் பட்டாபிஷேகத்திற்கு அயோத்திக்கு புறப்படுதல்





ஸ்ரீராம பட்டாபிஷேகம்



220. ஸ்ரீ விபீஷணன்
ஸ்ரீரெங்க விமானத்தை
ஏளப்பண்ணிக்கொண்டு
விடுகிற அவசரம்